மேல் மாகாண சபை - 2025

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மேல் மாகாண சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரைக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2026 ஜுன் 22 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 ஜுன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட 09 நிறுவனங்களின் ரூபா 625 மில்லியன் பெறுமதியான நிதியல்லாத சொத்துக்கள் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒதுக்கிவைக்கப்பட்ட நிதியும் அப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் கணக்கில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பவதாக. | நிதியல்லாத சொத்துக்களையும் ஒதுக்கிவைக்கப்பட்ட நிதியையும் சரியாக இனங்கண்டு கணக்கில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையின் சட்டத்தொகுப்பு நிறுவனங்கள் 08 க்குரிய ரூபா 5,364 மில்லியன் பெறுமதியான நிதியல்லாத சொத்துக்களும், | எதிர்வரும் காலங்களில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எதிர்வரும் காலங்களில் சட்டத்தொகுப்பு நிறுவனங்களுக்குரிய நிதியல்லாத |

| | | | |
|---|---|---|---|
| | 05 நிறுவனங்களின் ரூபா் 142 மில்லியன் நிலையான வைப்பு மீதிகளும் காணப்பட்ட போதிலும், அப் பெறுமதிகள் மாகாண சபை நிதியின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | சொத்துக்கள் மற்றும் நிலையான வைப்புப் பெறுமதிகளை சரியாக இனங்கண்டு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய வகையில் 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய தீர்க்கப்படாத உயர் நீதிமன்ற வழக்குகள் 23 உம், மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் 70 உம், குடியியல் சார் மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் 05 உம், மேல் நீதிமன்ற வழக்குகள் 112 உம், மாவட்ட நீதிமன்ற வழக்குகள் 32 உம், நீதவான் நீதிமன்ற வழக்குகள் 04 உம், தொழிற் நியாயசபை வழக்குகள் 01 உம் என மொத்தமாக 247 வழக்குகள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் அவ்வாறு தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எதிர்வரும் காலங்களில் தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பான விபரங்களை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | ஆளுநர் அலுவலகத்தின் அவசர கால நிதியத்தின் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 108 மில்லியன் நிலையான வைப்புகளும், ரூபா 14 மில்லியன் வட்டி வருமானமும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எதிர்வரும் காலங்களில் அவசர கால நிதியத்தில் அடங்கியுள்ள நிலையான வைப்புக்கள் மற்றும் வட்டிப் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின்படி மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான செலவினம் ரூபா 4,211 மில்லியன ஆக இருந்தபோதிலும், நிதியல்லாத சொத்துக்களின் கொள்வனவாக கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 482 மில்லியன் மாத்திரமாக காணப்பட்டமையால் ரூபா 3,729 மில்லியன் பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது. | சொத்துக்களைக் கணக்கில் பதிவு செய்வது தொடர்பாக ஒப்பிட்டுக் காட்டுவதற்கான அறிக்கை ஒன்றைத் தயாரித்து எதிர்காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதாக. | மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதலைச் சரியாக இனங்கண்டு சொத்துக்களைச் சரியாகக் கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 100 – ஆளுநர்

#### 1.5.1.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுநருக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 09 அதிகாரிகளைக் கொண்ட விசேட விசாரணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அவ்வதிகாரிகளுக்கு 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை கொடுப்பனவாக ரூபா 824,800 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் மேலதிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விசேட விசாரணைப் பிரிவின் சோதனைகள் ஆரம்ப விசாரணைகளின் கீழ் உள்ளடக்கப்படுவதில்லை என்பதாக. | விசேட விசாரணை அறிக்கைகளின் பரிந்துரைகளை மேலதிக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 101 – மேல் மாகாண சபை செயலகம்

#### 1.5.2.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் செயற்பாடுகள் நடைபெறாத காலப்பகுதியில் மாகாண சபையின் ஆளுநரின் தனிப்பட்ட பணியாளர் குழாத்தைச் சேர்ந்த இரு சாரதிகளுக்கு மேலதிக நேர மற்றும் கூட்டுக்கொடுப்பனவுகளாக ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்த பின்னர் மாகாண சபையின் ஆளுநர் பதவியை வகிப்பவருக்குச் செய்ய வேண்டிய நிரந்தரமான கடமைகள் எதுவும் இல்லாததன் காரணமாக, அவர் தினசரி மாகாண சபைச் செயலகத்திற்குச் சமூகமளித்திருக்காவிட்டாலும், ரூபா 67 | மாகாண சபைகள் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் பிரகாரம் கலைக்கப்பட்ட பின்னர் நடைபெறும் சபையின் முதலாவது கூட்டம் வரை ஆளுநர் பதவி வெற்றிடமாக்கப்படக் கூடாது என்பதால், ஆளுநர் மற்றும் பணியாளர் குழாத்திற்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளதாகவும், | சட்டத்திற்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன், தேவையினை இனங்கண்டு அதற்கான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மில்லியன் பெறுமதியான இரண்டு வாகனங்களுக்கு எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 2 மில்லியன் வழங்கப்பட்டு, வாகனங்களின் பராமரிப்புக்காக ரூபா 4 மில்லியன் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. அதனுடன் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லுகை உறுதிப்படுத்தப்படாமல், சபைச் செயலகத்தில் உள்ள ஆளுநரின் தனிப்பட்ட பணியாளர் குழாத்தைச் சேர்ந்த 06 பேருக்கு மீளாய்வாண்டில் சம்பளமும் கொடுப்பனவுகளும் என ரூபா 3.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2009 ஒக்டோபர் 14 திகதிய மாகாண சபை அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் ஆளுநரின் அனுமதியுடன் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாக. |

### 1.5.3 தலைப்பு 102 – மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

### 1.5.3.1 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கை | பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆளுநர் பதவியானது உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான உரிமை உள்ள பதவியாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எனினும், வாரத்திற்கு 02 நாட்கள் ஆணைக்குழுவிற்கு வருகை தருவதற்காகத் ஆளுநருக்கு உத்தியோகபூர்வ வாகனமும், மாதத்திற்கு 230 லீட்டர்களுக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவுகள் என 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை ரூபா 4.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஆளுநரின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத பதவிகளுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படுதல் கூடாது என்பதுடன், சுற்றறிக்கை விதிகளுக்கு இணங்காமல் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 தலைப்பு இலக்கம் 103 - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

#### 1.5.4.1 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கை | மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் ஆளுநர் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றுக்குரிய பதவியில் உள்ளடக்கப்படவில்லை என்றபோதிலும், ஆணைக்குழுவின் தலைவருக்கு மாதத்திற்கு 145 லீட்டர் எரிபொருளுக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 03 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டு முதல் ஆளுநரின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளதுடன், அமைச்சிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டிருந்தும் இதுவரை ஆலோசனைகள் கிடைக்கப் பெறாததால், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவினை மாதாந்தம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத பதவிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதுடன், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கக் கூட்டுறவு விதியின் 28 ஆம் பிரிவு, 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுப் பிரமாணங்கள் மற்றும் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டம் | சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதித் தொகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்குக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி ஊழியர் ஒருவரை நியமிக்க முடியாது என்றபோதிலும், மீளாய்வாண்டில் மேல் மாகாணத்திற்குள் செயற்பாட்டில் உள்ள 1,203 கூட்டுறவுச் சங்கங்களில் 67 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல் 1,455 ஊழியர்கள் | தீர்மானங்கள் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் திணைக்களத்திடம் உள்ளமையால், ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காகச் சட்ட அதிகாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக. | பிரமாணங்கள்/சட்டங்களுக்கு இணங்கச் செயற்பட்டு, முறையற்ற நியமனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நியமிக்கப்பட்டிருந்தனர். குறித்த முறையற்ற நியமனங்கள் தொடர்பில் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | |

**1.5.5 தலைப்பு 104 – உள்ளூராட்சி, பொருளாதார மேம்படுத்தல், மின்வலு மற்றும் வலு சக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு**

**1.5.5.1 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மாகாண சபைகள் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டு, ரூபா 121.87 மில்லியன் மதிப்பீட்டுச் செலவைக் கொண்ட ஒதுக்கீடுகளைப் பெற்றிருந்த 54 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | 2025 திசெம்பர் 01 திகதிய பிரதம செயலாளரின் கடிதத்திற்கு இணங்க, அங்கீகரிக்கப்பட்ட போதிலும் நடைமுறைப்படுத்தல் மட்டத்தில் இல்லாத செயற்திட்டங்களை இரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தாக. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5.2 பொருளாதார மேம்படுத்தல் பணியகம்**

**1.5.5.2.1 பார்வைக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை பொருளாதார மேம்படுத்தல் பணியகத்திற்குத் தேவையான குப்பைகளை போடுவதற்கான பொதிகள் மற்றும் ஹார்ட்வெயர் பொருட்களை வழங்குவது ஒரே தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அக் காலப்பகுதிக்காக ரூபா 169 மில்லியன் அந்நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவுகள் சந்தை விலையிலான விலை மனு கோரர் முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயற்திட்டமானது ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தைத் தெரிவு செய்யும் போது ஆரம்பத் தகுதிகாண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒரே | தெளிவுபடுத்தல்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று தயாரிக்கப்படுவதாக. | எதிர வரும் காலங்களில் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு இணங்க கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திடமிருந்து மாத்திரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 74 மில்லியன் நட்டம் பணியகத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பொருளாதார மேம்படுத்தல் பணியகத்தின் கீழ் இயங்கும் வெஸ்பிரோ அச்சகத்தில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அச்சுத் தாள் களவுக் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 42 மில்லியனாகும். அச்சகத்தில் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சகத் தலைவர் மற்றும் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தின் கவனயீனம் காரணமாக அவ்வேற்பாடுகளை இலகுவாகத் தவிர்த்துச் செல்லக்கூடிய சாத்தியம் காணப்பட்டமை மற்றும் முறையான கண்காணிப்பு இன்மை போன்ற காரணங்களினால் கணக்காய்வுக்குப் போதுமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் வெளிப்படுத்தப்பட்ட களவின் பெறுமதியானது இத்தொகையை விட உயர்வான பெறுமதியைக் கொண்டிருப்பதற்கான சாத்தியம் காணப்பட்டது. | முன்னாள் அச்சகத் தலைவர் கொடுப்பனவுகளை மேற்கொள்ள மாட்டார் என்பதும் மற்றும் மேலும் இரு அதிகாரிகள் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ளதாக. | களவுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு, நிறுவனத்தின் உட்பகற்பாட்டை வலுப்படுத்துவதுடன், தணிக்கைக்குப் போதுமான சான்றுகளை வழங்க வேண்டும். |

### 1.5.5.3 மேல் மாகாண சுற்றுலா சபை

#### 1.5.5.3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய் 186 மில்லியன் செலவில் கட்டப்பட்ட ஏத்துக்கால நீர்ப்பூங்காத் திட்டத்தின் பணிகள் நிறைவடைந்து, சுற்றுலா சபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக காணப்படுகின்ற போதிலும், சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக அதைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. தற்போழுது சுமார் 5 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தமையினால், நீர்ப்பூங்காவின் சொத்துகள் சேதமடைந்தமை மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்ப டாமை போன்ற காரணங்களால் அதனை மீண்டும் பயன்படுத்துவதற்கு பெருமளவி | குறித்த செயற்திட்டப் பூங்கா அமைந்துள்ள நிலப்பகுதி சுற்றுலாத்துறையைக் கவரும் திறனைக் கொண்டுள்ள ஒரு பகுதியில் அமைந்திருப்பதால், வேறு மாற்று நடவடிக்கைகள் மூலம் முதலீட்டு வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் கோவிட் தொற்றுநோய், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் மற்றும் போராட்டக் காலங்களில் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக வாடகைப் | சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தைக் கவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| லான செலவினம் ஏற்பட்டிருந்தது. மேலும், பூங்கா அமைந்துள்ள நிலத்தின் உரிமை சபையிடம் முறையாகப் ஒப்படைக்கப்படாமல் இவ்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், இந்நீர்த் திட்டத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படவேண்டிய வாடகை வருமானம் ரூபாய் 289,373 ஆகும். | பணத்தைச் செலுத்துவதற்கு இயலாமை ஏற்பட்டுள்ளதாகவும் நீர்கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளதாக. | |
| (ஆ) 2022 மே 09 ஆம் திகதியன்று நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக, சில தரப்பினரால் சுற்றுலா சபைக்குச் சொந்தமான ஏத்துக்கால நீர்ப்பூங்காவின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருந்ததுடன், அச்சேதம் ரூபாய் 3.5 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறான சேதங்கள் ஏற்பட்டு 04 ஆண்டுகளை அண்மித்திருந்தும், அச்சேதம் தொடர்பாக சபையினால் தேவையான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நீர்கொழும்பு பிரதேச செயலகம் ஊடாக மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதாக. | சேதங்களுக்கான நட்டஈட்டை அறவிட்டு, சொத்துக்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5.4 கழிவு முகாமைத்துவ அதிகாரசபை**

**1.5.5.4.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண விவசாய அமைச்சினால் ரூபாய் 63 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட திரவ உர உற்பத்தித் செயற்திட்டம், 2022 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நிர்மானிப்புக்கள் தொடர்பில் உரிய அனுமதிகளும் பெறப்பட்டிருக்கவில்லை. மீன் திரவ உர வளாகமொன்றைக் நிர்மானிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபையினால் ரூபாய் 136 மில்லியன் செலவிடப்பட்டிருந்தபோதிலும், குறித்த வளாகம் திறந்து வைக்கப்பட்ட திகதியான 2024 செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் 2026 மே மாதம் வரை இச் செயற்திட்டத்தின் பணிகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உற்பத்திக் கூடத்தில் | வளங்குன்றிய திரவ உர செயற்திட்டம் விவசாயத் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கரிம உர ஊக்குவிப்புத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், முறைசார்ந்த முறையில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அரச - தனியார் பங்களிப்புச் செயற்திட்டமாக திரவ உர உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளதாக. | உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்தி திரவ உர உற்பத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்களும் உபகரணங்களும் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாகப் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | | |
| (ஆ) | விவசாய அமைச்சினால் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ரூபாய் 72 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆகாயத்தாமரை சேதன உர செயற்திட்டம், 2022 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபாய் 30 மில்லியன் பெறுமதியான 54 சொத்துக்கள் 2 வருடங்களுக்கும் அதிகமான காலமாகப் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக. | உபகரணங்களைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தி, செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.6 தலைப்பு 105 – சுகாதார, உள்நாட்டு மருத்துவம், சமுதாய நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் அமைச்சு

#### 1.5.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 18 ஆம் திகதி ரூபாய் 5 மில்லியன் செலவில் பொறியியல் பணியகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட Agras T16 மற்றும் Matrice 300RTK ஆகிய இரண்டு டிரோன்களும், முறையே 2025 ஜனவரி முதல் அக்டோபர் இறுதி வரை 3 சந்தர்ப்பங்களிலும் 16 சந்தர்ப்பங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்த நிலையில், மீண்டும் ஒருமுறை 2023 அக்டோபர் 31 ஆம் திகதி ரூபாய் 14 மில்லியன் செலவில் Agras T20 மற்றும் Matrice 350RTK ஆகிய இரண்டு டிரோன்களை மீண்டும் கொள்வனவு செய்திருந்தனர். எனினும், அந்த இரண்டு விமானங்களும் 5 சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன. | இந்த டிரோன்களை இலங்கை விமானப் படையிடம் ஒப்படைப்பது பொருத்தமானது எனப் பரிந்துரைத்து, 2026 மே 19 திகதிய அமைச்சரவைக் விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | 04 டிரோன்களையும் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் ஒரு தரப்பிடம் ஒப்படைக்கவோ அல்லது பயன்பாட்டுக்கு உட்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான Matrice 350 RTK ட்ரோன், 2025 ஜனவரி 08 ஆம் திகதியன்று ஜிந்துப்பிட்டிய பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அவதானிப்பதற்காகப் பறந்து | இந்த ட்ரோன் விபத்து தொடர்பில் நட்டஈடு மற்றும் இழப்பீட்டுப் பரிசீலனைக் குழுவொன்றை அமைப்பதற்காக, ட்ரோன் தொழில்நுட்ப அறிவுள்ள | நட்டங்களை அடையாளம் கண்டு உடனடியாக மேலதிக |

| | | |
|---|---|---|
| கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளாகியிருந்தது. அது தொடர்பாக விமானப்படைத் தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின்படி, நட்டம் ரூபாய் 5.6 மில்லியன் என அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரியொருவரைப் பெயரிட்டு அனுப்புமாறு கோரி விமானப்படைத் தளபதிக்கு 03 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்காக அதிகாரியொருவர் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்ட பின்னர், நட்டஈட்டுப் பரிசீலனைக் குழுவொன்று அமைக்கப்பட்டு அவசியமான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 106 – விவசாய, காணி, நீர்ப்பாசனம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அமைச்சு

#### 1.5.7.1 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய அமைச்சிற்குச் சொந்தமான, ரூபாய் 56 மில்லியன் பெறுமதியான அமைச்சின் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள நாறாஹேன்பிற்ற நிலத்தை அமைச்சின் பெயரில் சுவீகரித்துக் கொள்வது மீளாய்வாண்டிலும் சாத்தியமாகியிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக செயற்பாடுகள் வெளியக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக. | சம்பந்தப்பட்ட சொத்தை அமைச்சு தனது கட்டுப்பாட்டின் கீழ் சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |

#### 1.5.7.2 விவசாய சேவைகள் திணைக்களம்

##### 1.5.7.2.1. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கைக் ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண நிதிப் பிரமாணத்தின் 54.5, 54.6, 55.2 மற்றும் 55.4 விதிகளுக்கு அமைவாக, நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டவுடன் உடனடியாக ஆரம்ப அறிக்கையொன்றோ அல்லது அவ்வாறு செய்ய முடியாதவிடத்து நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்றோ வழங்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட, ஒட்டுமொத்தமாக ரூபாய் 2 மில்லியன் பெறுமதியிலான 13 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்றை நியமித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக. | நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு அதனை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 2012 ஆம் ஆண்டின் 01 இலக்க விவசாய சேவைகள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கங்களில், விவசாய வணிக தொழில்முனைவோருக்கு நிதி வசதிகளை வழங்குவது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, அதிகாரசபையானது தொடர்ச்சியாக உரிய நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றத் தவறியமையின் காரணமாக, மேல் மாகாணத்தின் விவசாய வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை | விவசாய வணிகத் தொழில்முனைவோருக்காக நிதி வசதிகளை வழங்குவது தொடர்பில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதாக. | பிரமாணத்திற்கமைய விவசாய வணிகத் தொழில்முனைவோருக்கு நிதி வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8 தலைப்பு 107 - வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு**

**1.5.8.1 மேல் மாகாணத்தின் வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபை**

**1.5.8.1.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவைப் பிரமாணத்திற்கமைய, மேல் மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபையானது சட்டரீதியாகப் பாதை அனுமதிப்பத்திரங்களை மேல் மாகாண எல்லைக்குள் மாத்திரம் இலக்குகளைக் கொண்ட வழிகளுக்காக வழங்க முடியும் என்பதுடன், மாகாணங்களுக்கு இடையேயான சேவைகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அதற்கு மாறாக அதிகாரசபையானது 110 பேருந்துகளுக்கு, முறையே தெற்கு மாகாணத்திற்கு 18 உம், சப்ரகமுவ மாகாணத்திற்கு 39 உம் மற்றும் வடமேல் மாகாணத்திற்கு 53 உம் என அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தது. அத்துடன், 2020 ஆம் ஆண்டு முதல் 2026 ஜனவரி 31 ஆம் திகதி வரை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக தெற்கு மாகாணத்தின் நெலுவ, பிட்டிவல, மிரிஸ்வத்தை மற்றும் அவித்தாவை ஆகியவற்றுக்கு இயக்கப்படுவதற்காக, விலைகோரல் நடைமுறைக்குப் புறம்பாக 10 பயணிகள் சேவை | பொதுமக்களுக்கு இலகுவாகச் சென்று சேரக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சனத்தொகை மிகுந்த இடம் இல்லாத சந்தர்ப்பத்தில், மாகாண எல்லைக்கு அப்பால் உள்ள உப நகரமொன்று இலக்காகத் தெரிவு செய்யப்படுவதாக | பிரமாணத்திற்கு இணங்க, விலைகோரல் நடைமுறைக்குப் புறம்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்களும், வடமேல் மாகாணத்தின் கிரிஉள்ள வரை 04 அனுமதிப்பத்திரங்களும் பிராந்திய முகாமையாளர்களின் பரிந்தரையின் பேரில் முன்னாள் தலைவரால் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய விலைகோரல் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை முழுமையாகச் செலுத்தாத 100 பேருந்து உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படாமல் உள்ள ரூபாய் 26 மில்லியன் பெறுமதியான மீதித்தொகையானது, 06 முதல் 11 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிகளாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | விலைகோரல் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை உடனடியாக அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | பயணிகள் சேவைப் பேருந்துச் செயற்பாடானதுனது நிறுத்தப்பட்டு 06 மாதங்களுக்கு மேல் செயற்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட பேருந்துகளின் பாதை அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதுடன், அந்தப் பேருந்துகளை மீண்டும் இயக்கத்திற்குச் சேர்க்கும்போது, பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கும் வேளையில் அனுமதிப்பத்திரதாரர் பழைய பேருந்தையே செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதாக இருந்தால் 30,000 ரூபா கட்டணமும், புதிய பேருந்தொன்றை பயன்படுத்துவதாக இருந்தால் 60,000 ரூபா கட்டணமும் அதிகாரியினால் அறவிடப்பட வேண்டும். எனினும், 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அத்தகைய கட்டணங்களை அறவிடாமல் 151 பேருந்துகளை செயற்பாட்டில் இணைப்பதற்கு அதிகாரசபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 151 பேருந்து உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் 3 மில்லியன் ரூபாவாக, 02 தொடக்கம் 08 ஆண்டுகள் வரையிலானகாலம் அறவிடப்படாமல் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | அனுமதிப்பத்திரக் கட்டணங்களை முறைசார்ந்த முறையில் மற்றும் உடனடியாக அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் செயற்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள பாதை அனுமதிப்பத்திரங்களின் உரிமையை அனுமதிப்பத்திரதாரர்கள் வேறு தரப்பினருக்கு மாற்றும்போது 100,000 ரூபா கட்டணம் அதிகாரசபையினால் அறவிடப்படுகின்றது. அவ்வாறு 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆம் | பதில் வழங்கப்படவில்லை. | வேறு தரப்பினருக்கு மாற்றப்பட்டிருந்த நிலுவையான அனுமதிப்பத்திரக் கட்டணங்களை உடனடியாக அறவிட்டுக்கொள்வதுடன், கட்டணம் எதையும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரையிலான காலப்பகுதியில் 31 அனுமதிப்பத்திரங்களின் உரிமை வேறு தரப்பினருக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு அறவிடப்பட வேண்டிய 2 மில்லியன் ரூபா கட்டணத்தை அறவிடாமல் அனுமதிப்பத்திர உரிமையைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கட்டணங்கள் அறவிடப்படாமல் காணப்பட்டன. | | அறவிடாமல் திருத்தங்களை மேற்கொண்ட அதிகாரிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.1.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அதிகாரசபைக்குச் சொந்தமான 247 கடைகளில், 175 கடைகளுக்கான கடை வாடகை ரூபா 56 மில்லியன் நிலுவையாக இருந்ததுடன், அந்த மீதித்தொகையிலிருந்து 01 வருடத்திற்குள் குறைவான காலப்பகுதியாகவும், 01 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியாகவும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியாகவும் நிலுவையிலுள்ள முறையே ரூபா 14 மில்லியன், ரூபா 20 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியன் ஆகியவற்றை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் வரும் காலத்தில் நிலுவை வாடகைத் தொகையைக் குறைத்துக் கொள்வதற்காக முறைசார்ந்த அறவிட்டுக்கொள்ளும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று செயற்படுத்தப்பவதாக | நிலுவையில் உள்ள கடை வாடகைகளை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபைக்குச் சொந்தமான 247 கடைகளில் 41 கடைகள் 02 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியாக வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தமொன்றுக்கு உட்படுத்தப்பட்டு வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குத்தகைக்கு விடப்பட்டுள்ள 206 கடைகளில் 75 கடைகள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்யப்படாமையின் காரணமாக அதற்கான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியாக வழக்குத் தொடரப்பட்டுவரும் 30 கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடை வாடகையான ரூபா 35 மில்லியன் மற்றும் மேலதிக கட்டணமாக ரூபா 2 மில்லியனும் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பயனுள்ள வருமான வழிகளாக மாற்றும் நோக்கத்துடன் குத்தகைக்கு விடுவதற்கான மாற்று நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக | நிலுவைக் கடை வாடகைகளையும் மேலதிக கட்டணங்களையும் அறவிட்டுக்கொள்வதற்கு மற்றும் குத்தகைதாரர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அதிகார சபையில் சேவையாற்றும் 489 ஊழியர்களுக்குத் தொடர்பாக கடந்த 06 வருட காலப்பகுதியில் மொத்தமாக ரூபா 2,050 மில்லியன் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தகைய கொடுப்பனவுகளுக்காக Government Payroll System (GPS) பயன்படுத்தப்படாமையின் காரணமாக அக்கொடுப்பனவுகளின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான முறைமைசார் கட்டுப்பாடு காணப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர்களுக்குச் சம்பளப் பட்டியல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு மூலம் Government Payroll System தொடர்பில் பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | GPS முறைமையை உடனடியாகச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக | GPS முறைமை மூலம் சம்பளத் தயாரிப்பு நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் ஊழியர்களின் கல்வித் தகுதிகள் காலத்திற்கேற்ப பரிசீலிக்கப்படாமையின் காரணமாக 1992-2019 ஆம் ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 89 ஊழியர்கள் போலியாக உருவாக்கப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்தி சேவையில் இணைந்திருந்தமை கண்டறியப்பட்டது. சட்டரீதியான ஏற்பாடுகள் இருந்தபோதிலும் அவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவர்களில் 73 பேர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், அவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று ஊழியர்களைத் தவிர ஏனைய அனைத்து ஊழியர்களின் சான்றிதழ்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக | போலி ஆவணங்களைப் பயன்படுத்தி சேவையில் இணைந்த ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களின்படி ரூபா 54 மில்லியன் பெறுமதியான பேருந்து நிலையங்கள் பௌதீக ரீதியில் இல்லை என அடையாளம் காணப்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அது தொடர்பாக மாகாண திறைசேரியின்ன் அங்கீகாரத்தைப் பெற்று நிதிக்கூற்றுக்களிலிருந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌதீக ரீதியாக அகற்றப்பட்டிருந்தபோதிலும், அது தொடர்பான செலவு மற்றும் திரண்ட தேய்வுகள் நிதி ஏடுகளில் சரியாகச் சீராக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மாகாணப் திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்தவுடன், இந்தப் பழைய மீதிகளுடன் தொடர்புடைய பௌதீக ரீதியாகக் காணப்படாத அனைத்துச் சொத்துக்களையும் நிதிக்கூறுக்களிலிருந்து அகற்றி கணக்குப் புத்தகங்களைப் | பேருந்து நிலையத்தின் பெறுமதி சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | |
| (ஊ) | 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.1.6 (v) ஆம் பந்திக்கமைய வாகனமொன்று சேர்க்கப்பட வேண்டும் என கூட்டுத்தாபனங்கள் / அதிகார சபை இயக்குநர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் அரச கூட்டுத்தாபனங்கள் / அதிகார சபை சிரேஷ்ட அதிகாரிகளுக்கான தொடர்புடைய அங்கீகாரங்களின் பேரில் மாத்திரம் உத்தியோகபூர்வ வாகன வசதிகளை வழங்கும் சாத்தியம் காணப்படுவதுடன், இதற்கு மேலதிகமாக 2016 நவம்பர் 01 ஆம் திகதிய மேல் மாகாணப் பிரதம செயலாளரின் 01/2016 (i) ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.2.1 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்குரிமை உள்ளவர்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 22/99 ஆம் இலக்கத்தின் பிரகாரம் தகுதிபெறும் அதிகாரிகளுக்கு மாத்திரம் ஆகும். எவ்வாறாயினும், அவ்வாறு அனுமதி எதனையும் பெற்றுக்கொள்ளாமல் பிரதிப் பொது முகாமையாளருக்கு (செயற்பாடு) 2017 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்பட்டு ரூபா 3 மில்லியன் எரிபொருள் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | உத்தியோகபூர்வ வாகனங்களை சேர்ப்பது மற்றும் பயன்படுத்துவது தொடர்பில் பணிப்பாளர் சபையின் பத்திரம் 1629 ஊடாக இயக்குநர் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது உரிய அனுமதிகளுடன் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | சுற்றறிக்கைக்கு அமைவாக உத்தியோகபூர்வ வாகனங்களையும் எரிபொருள் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக அங்கீகாரம் வழங்கிய அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அப்பரிந்துரைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ஏதேனும் உத்தியோகத்தரால் உத்தியோகபூர்வமாக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்காக உரிமைகொண்ட பதவியொன்றில் பதிற் கடமை ஆற்றுவாராயின் அத்தகைய உரிமை அவரிடம் காணப்படுவதுடன், அத்தகைய பதவியொன்றில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தரொருவருக்காகப் பிரதம செயலாளரின் அனுமதியுடன் அவ்வுரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், அதிகாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) ஆகிய பதவிகளில் பதிற் கடமை ஆற்றிய அதிகாரிகளினால் அவ்வாறு அனுமதி எதனையும் பெற்றுக்கொள்ளாமல் 2017 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலான கணக்காய்வுத் திகதி வரை 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டு | உத்தியோகபூர்வ வாகனங்களை சேர்ப்பது மற்றும் பயன்படுத்துவது தொடர்பில் பணிப்பாளர் சபைப் பத்திரங்கள் 1629 ஊடாக இயக்குநர் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது உரிய அனுமதிகளுடன் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | சுற்றறிக்கைக்கு அமைவாக உத்தியோகபூர்வ வாகனங்களையும் எரிபொருள் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக அங்கீகாரம் வழங்கிய அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அப்பரிந்துரைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அவ்வாறு அனுமதி இன்றி முறையே அப்பதவிகளுக்காக ரூபா 3 மில்லியன் வீதம் எரிபொருள் கொடுப்பனவுகளும், பிரதிப் பொது முகாமையாளருக்கு (நிர்வாகம்) ரூபா 2 மில்லியன் போக்குவரத்துக் கொடுப்பனவாகவும் மொத்தமாக ரூபா 8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**1.5.8.1.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகாரசபைக்குச் சொந்தமான மாலபே பேருந்து நிலைய வளாகத்திலுள்ள 21 கடைகள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மாதாந்தம் ரூபா 1,646 முதல் ரூபா 2,018 வரையிலான மிகக் குறைந்த தொகைக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன. அவற்றுள் 14 கடைகள் குத்தகைதாரர்களால் மீண்டும் 05 முதல் 20 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியாக ரூபா 7,000 முதல் ரூபா 60,000 வரையிலான மாதாந்த வாடகைக்கு வேறு தரப்பினருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. மேலும், பெரும்பாலான கடைகளுக்கான சட்டரீதியான எந்தவொரு உரிமையும் இல்லாத தரப்பினருக்கு உரிமை மாற்றப்பட்டிருந்ததுடன், அத்தரப்பினரால் குத்தகை வழங்குநராக மற்றுமொரு தரப்புடன் மாதாந்தம் ரூபா 50,000 முதல் ரூபா 60,000 வரை அதிக தொகையை அறவிட்டு, வைப்புப் பணமாக ரூபா 300,000 வரை பணத்தைப் பெற்றுக்கொண்டு சட்டவிரோதமான முறையில் உப குத்தகை ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்த போதிலும், இது தொடர்பாக அதிகாரசபை எவவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஏற்கனவே சில கடைகள் அரசாங்க மீன்மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் மற்றும் வாடகைத் திருத்தச் செயற்பாடுகள் முறைமைப்படுத்தப்படுவதாக. | கடைகளை முறையாக மதிப்பீடு செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒப்பந்தங்களுக்குப் புறம்பான உப குத்தகைக்கு வழங்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.8.2 மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

#### 1.5.8.2.1 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 182 மில்லியன் கொண்ட 20 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டிற்குள் ரூபா 69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அத்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதியின் பொழுதும் நிறைவுசெய்யப்பட்டிருக்காமை மற்றும் செயற்திட்டங்களிலிருந்த குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் காரணமாக அதிகாரசபையினால் ரூபா 109 மில்லியன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேசி பணத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | திட்டங்களின் குறைபாடுகளை உடனடியாகத் திருத்திக் கொள்வதற்கும், நிலுவைப் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாணப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மாகாணம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான மானியங்களின் (PSDG) கீழ் அதிகாரசபையின் களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்ட, மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 16 மில்லியனைக் கொண்ட 03 செயற்திட்டங்கள் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் மற்றும் சம்பந்தப்பட்ட மதிப்பீடுகளுக்கும் திட்டங்களுக்கும் இணங்க மேற்கொள்ளப்பட்டிராமையின் காரணமாக, செலவைப் மீளப்பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுக்குக் பட்டியல்களை சமர்ப்பிக்க முடியாமல் போயிருந்தது. | இந்தச் செயற்திட்டங்களின் தரம் தொடர்பான சிக்கல்கள் காரணமாகக் பட்டியல்களைச் சமர்ப்பிக்க முடியவில்லை என்பதாக. | தரத்திற்கு ஏற்பத் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமை தொடர்பிலும் செயற்திட்டங்களை மேற்பார்வை செய்த அதிகாரிகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு, அந்தப் பரிந்துரைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.8.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி அமைச்சுக்குச் சொந்தமான 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 32 மில்லியனும், சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 11 செயற்திட்டங்களுக்காக ரூபா 96 மில்லியனும், கழிவுமுகாமைத்துவ அதிகாரசபைக்குச் சொந்தமான 03 | மீளாய்வாண்டில் வேலைகளை நிறைவு செய்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளதாக. | வேலைகளை உடனடியாக நிறைவு செய்து குறைபாடுகளைத் திருத்திக் கொண்டு, மேலதிகமாகச் செலவிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்களுக்காக ரூபா 54 மில்லியனும், வீதிப்பயணிப் போக்குவரத்து அதிகாரசபைக்குச் சொந்தமான 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 57 மில்லியனும் என மொத்தமாக ரூபா 239 மில்லியன் தொகையானது சேவை வழங்குநர் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற பணத்தை விட மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. | | பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.3 கூட்டுறவு நிதியம்**

**1.5.8.3.1. குறிக்கோள்களுக்குப் புறம்பான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1973 ஆம் ஆண்டு கூட்டுறவு விதிகளுக்கு இணங்க, நிதியத்தின் பணத்தைக் கூட்டுறவு கல்வி, செயற்திட்டங்கள் மற்றும் விளம்பரப் பணிகள், கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவச் செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுதல் போன்றவற்றுக்குப் பயன்படுத்த முடியும் எனினும், அதற்கு மாறாக 2011 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்கள், ஊழியர் சேமலாப நிதியத்தின் வரி வாடகைக் செலவுகள், மீளாய்வுக் குழுப் படிகள், கூட்டுறவு சங்கப் படிகள், கூட்டுறவுத் திணைக்களத்தின் தேவைகளுக்காகச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சேமலாப நிதியக் கணினி அதிகாரிகளுக்கான படிகள் உள்ளிட்ட நிதியத்தின் குறிக்கோள்களுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக ரூபா 61 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. | அமைச்சின் செயலாளரால் 2009 ஜனவரி 16 திகதியிடப்பட்டுப் பணிப்பாளர் (கணக்குகள் மற்றும் கொடுப்பனவுகள்) அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய, நிதியத்தைச் செலவிடக்கூடிய விதம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு அமைவாகச் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | கூட்டுறவு நிதிய விதிகளுக்கு இணக்கமான செலவுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண சபையின் கூட்டுறவுச் சங்கங்களின் திருத்தப்பட்ட பிரமாணத்திற்கமைய, ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் | 2026 ஜனவரி 01 ஆம் திகதியளவில் கூட்டுறவு நிதியப் பங்களிப்புக்காக ரூபா 73,931,399 | அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிட்டுக்கொள்வத |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுறவுப்பதிவாளரால் குறிப்பிடப்பட்டவாறு, அச்சங்கத்தின் வருடாந்த தேறிய இலாபத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 5 க்குக் குறையாத தொகையைக் கூட்டுறவு நிதியத்திற்கான பங்களிப்புப் பணமாக ஆண்டுதோறும் செலுத்த வேண்டியிருந்த போதிலும், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவுகள் மூன்றிலுமுள்ள 1,124 சங்கங்கள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதிவரை ரூபா 1,001 மில்லியன் தொகையைச் செலுத்தியிருக்கவில்லை. | அறவிடப்பட்டுள்ளதாகவும், பிரமாணத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக | ற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன்களை மீள அறவிடுவதற்காகத் திட்டவட்டமான எழுத்துமூல நிபந்தனைகள் மற்றும் பிணைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதைப் பின்பற்றுவதிலிருந்து விலகி, கூட்டுறவு நிதியத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு 03 மற்றும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட செலுத்தும் காலத்திற்கு உட்பட்டு ஒரு சங்கத்திற்கு ரூபா 25 மில்லியன் வரை கடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கூட்டுறவு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தைச் செலுத்தத் தவறிய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டு வரை எத்தகைய பிணைகளையும் பெற்றுக்கொள்ளாமல் 129 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா 1,089 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்தக் கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 584 மில்லியனாகக் காணப்பட்டது. | இக்கடன்களைச் செலுத்தி தீர்க்குமாறும், அவ்வாறு இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன், நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ள கம்பஹா மாவட்டச் சங்கங்களை அழைத்து நிலுவைக் கடன்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக. | கடன் தொகைகளைக் வழங்குவதற்கும், கடன்களை மீள அறவிடுவதற்கும் முறையான கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதுடன், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.8.4 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம்

#### 1.5.8.4.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியப் பிரமாணத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு மாறாக, 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 56 வயதுக்கு மேற்பட்ட மாகாண கூட்டுறவு ஓய்வூதிய நிதியத்தின் 211 ஊழியர்களுக்கு 40 சதவீதத்திற்கும் அதிகமான வீதத்தில் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருப்பதும், தவணை மற்றும் வயது என்பவற்றை அடிப்படையாகக் | 211 பேரின் ஓய்வூதியத்தைத் திருத்திச் செலுத்துவதற்குப் கட்டுப்பாட்டு சபை தீர்மானித்து, திருத்தப்பட்ட ஓய்வூதியத்தைச் செலுத்தி வருவதாகவும், அத்திருத்தம் தொடர்பில் 39 ஓய்வூதியதாரர்கள் | மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியப் பிரமாணத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கச் செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதிய வீதத்தை விட 48 சதவீதம் முதல் 78 சதவீதம் வரை அதிகமான வீதத்தில் ஓய்வூதியம் செலுத்தப்பட்டமையின் காரணமாக, 2022 அக்டோபர் 01 ஆம் திகதி வரை மொத்தமாக ரூபா 66 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக. | |

### 1.5.8.5 கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

#### 1.5.8.5.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிஹிலக் பழங்கள் மற்றும் விவசாயப் உற்பத்திகளின் பதனிடல் செயற்திட்டம் மற்றும் தகரங்களில் அடைக்கப்பட்ட மீன் பதனிடல் செயற்திட்டம் என்பவற்றுக்காக மரக்கறிகள், பழங்கள், வெண் சீனி, எரிபொருள், எரிவாயு மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது, வழங்குநர்களைப் பதிவுசெய்து அதனூடாகக் கொள்வனவு செய்யாமல், அவசரகாலக் கொள்வனவுகள் என 2023 ஜனவரி மாதம் முதல் 2025 திசெம்பர் மாதம் வரைவிலான காலப்பகுதியில் அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் செயற்திட்டப் பொது முகாமையாளர் ஆகியோர் 158 சந்தர்ப்பங்களில் ரூபா 9 மில்லியன் முற்பணத்தைப் பெற்று ரூபா 8 மில்லியனுக்கான கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தனர். மேலும், இந்த ரூபா 8 மில்லியனுக்கான கொள்வனவுகளுக்கு முறையான பொருள் பெறுகைப் பத்திரம் (GRN) வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதால், மூலப்பொருட்களும் இருப்புக்களும் களஞ்சியசாலைக்குக் கிடைக்கப்பெற்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கொள்வனவு முறைமைக்கேற்பத் செயற்திட்டத்தின் கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், கொள்வனவுகளுக்காக முறையான பொருள் பெறுகைப் பத்திரங்களை (GRN) வழங்கி, மூலப்பொருட்கள் மற்றும் பண்டங்கள் களஞ்சியசாலைக்குக் கிடைக்கப்பெற்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் விநியோகம் மற்றும் விற்பனைக்காக கண்டி, வெலிமடை மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் மூன்று விற்பனை முகவர்களுடன் 2024 ஆம் ஆண்டில் எத்தகைய பிணைப் பணமும், வங்கிப் பாதுகாப்பும் பெற்றுக்கொள்ளப்படாமல் 3 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு, ரூபா 19 மில்லியன் பெறுமதியான ஜாக் மகரல் தகரத்தில் அடைக்கப்பட்ட் மீன்கள் 31,200, பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் பணிப்பாளரால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. கடனை மீளச் | ஒப்பந்தத்திற்கமைய இணங்கியவாறு பணச் செலுத்துகைளைத் தவறியமை மற்றும் வழங்கப்பட்ட காசோலைகள் நிராகரிக்கப்படச் செய்தமை போன்றவற்றுடன் தொடர்புடைய முகவர்கள் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக. | கடனுக்கு விற்பனை செய்தல் மற்றும் கடன் தொகைகளை மீள அறவிடுவதற்காக முறையான முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை அனுமதித்த அதிகாரிகளிடமிருந்து நட்டத்தை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதற்காக மூன்று விற்பனை முகவர்களாலும் வழங்கப்பட்டிருந்த ரூபா 18 மில்லியன் பெறுமதியான 5 காசோலைகள், வங்கிக் கணக்கு மூடப்பட்டிருந்தமை மற்றும் காசோலைக்கான பணத்தைச் செலுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தமை என்பவற்றின் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன. | | வேண்டும். |
| (இ) | பூர்வாங்கத் திட்டமிடல் இன்றிப் பெருந்தொகையான செலவை மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான கண்ணாடிப் போத்தல்கள், அட்டைகள் மற்றும் லேபிள்கள் கொண்ட 106,859 தொகைப் பொருட்கள் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் விநியோகிக்கப்படாமல் வல்பிட மிஹிலக் தொழிற்சாலை வளாகக் களஞ்சியசாலையில் காணப்பட்டன. | தொழிற்சாலையின் செயற்பாடுகள் படிப்படியாக நிறுத்தப்பட வேண்டியேற்பட்டமையினால் கட்டளைகளைப் பொறுப்பேற்பது நிறுத்தப்பட்டதுடன், உற்பத்திச் செயற்பாடு மந்தமடைந்தமையினால் குறித்த தொகைப் பொருட்கள் விநியோகிக்கப்படவில்லை என்பதாக. | எஞ்சிய தொகைப் பொருட்களை உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கோ அல்லது பொருத்தமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.8.5.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மிஹிலக் விவசாயப் உற்பத்திகளின் பதனிடல் செயற்திட்டம் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் பதனிடல் செயற்திட்டம் என்பவற்றை மிகவும் இலாபகரமான திட்டமாகப் பேணிச் செல்வதற்காக 2022 செப்டம்பர் மாதம் தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 50 மில்லியன் பெறுமதியான இயந்திரங்களும், ரூபா 9 மில்லியன் பெறுமதியான மூலப்பொருட்களும் மற்றும் முடிவுப் பொருட்களுடனும் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் பதனிடல் செயற்திட்டத்தை ஆரம்பிப்பது 2023 நவம்பர் வரை ஒரு வருடத்திற்கும் மேலாகத் தாமதப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்குள் சில இயந்திரங்களின் உத்தரவாதக் காலமும் கடந்திருந்தது. அரசாங்கத்தினால் புதிய நிர்மாணங்கள் தாமதப்படுத்தப்படுவதற்கும் இடைநிறுத்தப்படுவதற்கும் அறிவுறுத்தப்பட்டிருந்த வேளையில், திட்டத்திற்காக தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தித் தொழிற்சாலைக் கட்டிடம் உள்ளிட்ட புதிய நிர்மாணங்களுக்கு ரூபா | திட்டத்தின் வர்த்தக ரீதியான உற்பத்தி விற்பனையை மேற்கொள்ளும் போது பிரயோகரீதியில் பொதுவாக முகம்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் தடைகள் பலவற்றின் காரணமாக எதிர்பார்த்தவாறு இலாபகரமான திட்டமாகச் செயற்படுவதற்குச் சிக்கல்கள் தோன்றியதுடன், ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் முகாமைத்துவ சபையினால் இத்திட்டத்தைத் தொடர்ந்து பேணிச் செல்வது நிறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முறையாக செயற்படுத்தும் முறைமையின் மூலம் தனியார் துறை முயற்சியாளரொருவருக்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக. | திட்டங்களின் வளங்களைப் பயனுள்ள வகையில் பிரயோகிப்பதற்கும், திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் முறையான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 181 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரைவிலான காலப்பகுதியில் விவசாய அமைச்சின் ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா 169 மில்லியனும், வீதிப் போக்குவரத்து அமைச்சு ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 248 மில்லியனும் உட்பட 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூபா 417 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், 2025 மற்றும் 2024 ஆகிய 2 வருடக் காலப்பகுதியிலும் ரூபா 88 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மிஹிலக் உற்பத்திகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 23 மில்லியன் அறவிடப்படாத கடன் மீதியும் காணப்பட்டது. | | |
| (ஆ) | வல்பிட மீன்பிடித் தொழிற்சாலை வளாகத்தில் ரூபா 30 மில்லியன் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2 வருடங்களுக்கும் அதிகமான காலம் அது பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டது. இக்கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் முறையான செயற்பாட்டு நிலையில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும் எனினும், 2025 ஆம் ஆண்டில் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2026 ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தித் திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. | திட்டத்தில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்திச் செயற்பாடு இடம்பெறாத காரணத்தினால் கழிவுநீர் முறைமை பயன்படுத்தப்படவில்லை என்பதாக. | திட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, திட்டத்தின் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.5.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு, 2027 ஆம் ஆண்டில் காலாவதியாகவிருக்கும் ஒரு அலகின் உற்பத்திச் செலவு ரூபா 890 ஆன ஜாக் மகரல் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 21,912, மீளாய்வாண்டில் ஒன்று ரூபா 360 | பதில் வழங்கப்படவில்லை. | விற்பனை முறைமைகள் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், உற்பத்திச் செலவைக் குறைத்துச் சந்தைப் போட்டித்தன்மையுடன் |

| | | | |
|---|---|---|---|
| | க்கும் ரூபா 448 க்கும் இடைப்பட்ட பெறுமதியில் லங்கா சதொசவுக்கு விற்பனை செய்யப்பட்டமையின் காரணமாக, மிஹிலக் திட்டத்திற்கு ரூபா 11 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | | செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் வல்பிட விவசாயப் உற்பத்திகளின் பதனிடல் செயற்திட்டத்திற்குச் சொந்தமான பெறுமதி ரூபா 2 மில்லியன் ஆன ஜாம், ஜூஸ் வகைகள், சோஸ் வகைகளைச் சேர்ந்த 5,520 தொகைப் பொருட்களும், 2025 ஆம் ஆண்டில் ரூபா 1 மில்லியன் பெறுமதியான மிஹிலக் செயற்திட்டத்திற்குச் சொந்தமான ஜாம், ஜூஸ் போத்தல்கள் 4,040 உம் காலாவதியானமையின் காரணமாக ரூபா 3 மில்லியன் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. மேலும், இக்காலாவதியான தொகைகள் கணக்காய்வு செய்யப்பட்ட நாளான 2026 ஜூன் 25 ஆம் திகதியின் போதும் தொழிற்சாலை வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் அதற்காகச் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | உற்பத்திகள் காலவதியாவதற்கு முன்னர் அவற்றை விற்பனை செய்வதற்கு முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை சீல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கேன் சீமர் இயந்திரம் மற்றும் ரிட்டோர்ட் இயந்திரம் பழுதானமை, காலாவதியானமை காரணமாகப் சேதமடைந்த தொகைகள் மீள அனுப்பப்பட்டமை மற்றும் ஏனைய காரணங்கள் என்பவற்றின் காரணமாகச் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் 3,027 சேதமடைந்தமையால் மிஹிலக் செயற்திட்டத்திற்கு ரூபா 2 மில்லியன் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. | கேன் சீமர் இயந்திரத்தின் தொழினுட்பக் கோளாறுகள் காரணமாக தகரம் சீல் செய்யப்படாமையால் குறித்த உற்பத்திகளைச் சந்தைக்கு விற்பனை செய்ய முடியாது போனதுடன், நீர்கொழும்பு மீன்பிடித் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்திலிருந்த தொகைகள் துருப்பிடித்தமையின் காரணமாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய முடியவில்லை என்பதாக. | தொகைகளின் சேதங்களைக் குறைத்துக்கொள்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அத்தொகைகளைப் பொருத்தமான முறையில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 108 – கல்வி கலாசார மற்றும் கலை அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

#### 1.5.9.1 செயற்திட்டங்கள் நிறைவு செய்யாமல் கைவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டு வரை மாகாணம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான மானியங்களின் கீழ் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி, ஹோமாகம கனிஷ்ட வித்யாலயத்தின் 70x25 அடி அளவிலான மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ரூபா 3 மில்லியன் | 2025 ஆம் ஆண்டில் கட்டிடத் தேவையை முன்னுரிமைப்படுத்தும் போது அவசியமானதாக இருந்த ஏனைய பாடசாலைகளின் நிர்மாணங்களுக்காக | கட்டிடத்தின் நிர்மாணங்களை நிறைவு செய்து கொள்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை ஒதுக்கிப்பெற்று, |

| | | | |
|---|---|---|---|
| | செலவிட்டு முதலாவது மாடி வரை நிறைவு செய்யப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2025 வருடாந்த மாகாண சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் குறித்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக இக்கட்டிட நிர்மாணத் திட்டத்தைச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க முடியவில்லை என்பதாக. | கட்டிடத்தைப் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை எனும் நிகழ்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட களனி அம்பகஸ்பிட்டிய வித்யாலயத்தின் ஆரம்பக் கல்வி வள நிலையத்தின் நிர்மாணச் செயற் திட்டத்திற்காக அடிக்கற்கள் நாட்டப்பட்டு இரும்புத் தூண்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 3.44 மில்லியன் செலவிடப்பட்டதன் பின்னர் குறித்த திட்டத்தின் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அடிக்கற்களும் இரும்புத் தூண்களும் பழுதடைந்து கொண்டிருந்தன. 2018 முதல் 2025 ஆம் ஆண்டு வரை 7 வருட காலம் அதுவரை திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்த செலவு பயனுள்ள வகையில் பிரயோகிக்கப்படும் வகையில் பொருத்தமான வேறொரு செயற்திட்டம் அல்லது நிறைவேற்றப்படாதமையின் காரணமாக, அடிக்கற்களை அமைப்பதற்காக அதுவரை செலவிடப்பட்டிருந்த தொகை வீண் செலவாக மாறியிருந்தது. | பாடசாலையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் மிகவும் பயனுள்ள வகையில் தற்போதுள்ள கட்டிடங்களைப் பயன்பாட்டுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு அவசியமான திருத்தப் பணிகளுக்காக ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டதாக. | திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்த செலவு பயனுள்ள வகையில் பிரயோகிக்கப்படும் வகையில் பொருத்தமான வேறொரு செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.9.2 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹரகம பொல்வத்த விளையாட்டு நிறுவனத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தில் வதிவிட வசதிகளுக்கான அறைகளைக் கொண்ட முதல் மாடியின் பணிகள் ரூபா 33.3 மில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், 2023 செப்டம்பர் 18 ஆம் திகதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மாகாண கல்வி அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2025 மாகாண விஷேட நன்கொடைகளின் கீழ் அத்தங்குமிடத்திற்கு அவசியமான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 02 மில்லியன் ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கொள்வனவை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை | தற்பொழுது பொருட்களின் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பொருட்களுக்குக் கட்டளைகள் இடப்பட்ட போதிலும், தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் பொருட்களை வழங்குவதற்கு இயலாது போயுள்ளதாக. | உபகரணங்களை உடனடியாகக் கொள்வனவு செய்து தங்குமிடத்தைப் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எடுக்கப்படாதமையின் காரணமாக, தங்குமிடத்தைப் பயன்படுத்துவதற்கு இயலாமல் போயிருந்தது.

### 1.5.9.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட MITSUBISHI வகையைச் சேர்ந்த EAZASRHER GALANT ரக மோட்டார் வாகனம் ஒன்று 2011 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த வேளையில், 2016 ஏப்ரல் 16 ஆம் திகதியன்று அதன் உதவிச் செயலாளரால் அனுமதியின்றி மோட்டார் வாகனத்தைச் செலுத்திச் சென்றபோது தெற்கு அதிவேக பாதையின் கொட்டாவை நுழைவாயிலில் திடீர் தீ விபத்துக்குள்ளாகிச் சேதமடைந்திருந்தது. அதன் முழுமையான நட்டமான ரூபா 2.75 மில்லியன் பெறுமதியில், மோட்டார் வாகனத்தைச் செலுத்திச் சென்ற அப்போதைய முன்னாள் உதவிச் செயலாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2.6 மில்லியன் தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | விசாரணைகளை உடனடியாக நிறைவுசெய்து, அதன் பரிந்துரைகளுக்கு இணங்கச் செயற்படுதல் வேண்டும். |

### 1.5.9.4 மனித வள முகாமைத்தவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாடசாலை ஊழியர் குழாம்களில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் முறையே 347 மற்றும் 5,066 வெற்றிடங்களைக் கொண்டிருந்ததுடன், முதன்நிலை ஊழியர் மற்றும் உதவிப் பணியாளர் குழாமில் 681 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர் குழாம் அறிக்கைகள் சரியானவை என்பதோடு ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதாக | வெற்றிடங்களை நிரப்பிக்கொள்வதற்கு அல்லது அவசியத்திற்கேற்பத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 109 – பிரதம செயலகம்

### 1.5.10.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டம் 06 ற்காக 2025 ஆம் ஆண்டின் மீளாய்வாண்டின் போது பொதுத் மூலதனத் திட்டங்களை | | திறைசேரியினால் செயற்திட்டங்கள்/நிகழ்ச்சித் |

| | | |
|---|---|---|
| திறைசேரியில் இருந்து ரூபா 16 பில்லியன் தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அப்பணத்திலிருந்து மாகாண சபையின் நிறுவனங்களுக்கு ரூபா 12,530 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. நிறுவனங்களால் ஆண்டின் இறுதியில் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய செயற்திட்டங்களுக்காகச் செலவிடப்படாமல் ரூபா 396 மில்லியன் மீண்டும் மாகாணக் திறைசேரிக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்காக மாகாண சபைக்குக் கிடைக்கப்பெற்ற தொகையிலிருந்து ரூபா 3,741 மில்லியன் அதாவது, 23 வீதமானவை மீதியாகியிருந்தன. | நிறைவுசெய்வது தாமதமடைந்தமையே இம்மீதிகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருந்ததாக. | திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்குகளைப் பயன்படுத்தி உரிய வேளையில் செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.10.2 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அதிகாரம் | அரச அதிகாரிகளுக்கு அரச இல்லமொன்றை வழங்குவது சாத்தியமானது என்றாலும், மாதாந்த அடிப்படையில் வீட்டுப்படியொன்றைச் செலுத்துவதற்கு எவ்வித இயலுப்பாடும் இல்லாதபோதிலும், உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணிக்கப்படும் வரை தற்காலிகமான கொடுப்பனவு என்ற அடிப்படையில் முன்னாள் பிரதம செயலாளருக்கு ரூபா 50,000 வீதமும், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ரூபா 30,000 வீதமும் 2011 ஆம் ஆண்டு | ஆளுநரின் அனுமதியுடன் செலுத்தப்பட்டுள்ளதாக. | இவ்வாறு அதிகாரிகளுக்கு வீட்டுக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாது என்பதுடன், தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 2025 ஆம் ஆண்டு வரை 25 அதிகாரிகளுக்கு ரூபா 28 மில்லியன் உத்தியோகபூர்வ இல்லப் படியானது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 29 திகதிய மற்றும் 13/2008(VI) இலக்கத்தைக் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மாகாணப் பிரதம செயலாளருக்கு மாதமொன்றுக்கு 220 லீற்றர் எரிபொருளும், மேலதிக செயலாளர் அல்லது அது போன்ற தகுதிகொண்ட அதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு 165 லீற்றர் எரிபொருளுக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஆளுநரின் அனுமதியுடன் பிரதம செயலாளருக்கு 100 லீற்றர் எரிபொருளாலும் ஏனைய அதிகாரிகளுக்கு 50 லீற்றர் எரிபொருளாலும் எரிபொருள் கொடுப்பனவு எல்லைகள் அதிகரிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை 41 அதிகாரிகளுக்கு மேலதிகமாக ரூபா 19 மில்லியன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | ஆளுநரின் அனுமதியுடன் செலுத்தப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன் மேலதிக கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.10.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக மாகாண சபையின் செயற்திட்டங்களுக்காக ரூபா 14,416 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா | சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடமிருந்து நிறைவு செய்யப்படாத 177 செயற்திட்டங்கள் தொடர்பாக விளக்கங்கள் | அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன், |

| | | |
|---|---|---|
| 12,792 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. 5,514 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் முழுமையாக நிறைவு செய்வதற்குச் சாத்தியமாகியிருந்தது 5,337 செயற்திட்டங்கள் மாத்திரமே ஆகும். செயற்திட்டத்திற்கமைய ரூபா 2,125 மில்லியன் பெறுமதியான 177 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக. | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.10.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதம செயலாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான மொத்தம் ரூபா 14 மில்லியன் பெறுமதியான 39 சொத்துகள் தேவைக் கருதிப் பார்க்கப்படாமல் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக, சிற்றுண்டிச்சாலைக்குள் பயன்படுத்தப்படாமல் 07 வருட காலப்பகுதியாகச் செயலற்ற மற்றும் குறைப்பிரயோகிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. | அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | சொத்துகளைப் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது தேவைப்பாடுடைய அரச நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.10.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் அனைத்து அதிகாரிகளின் தகவல்களையும் உள்ளடக்கி முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை ஒரு வருடத்திற்குள் தயாரிப்பதற்காக ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2020 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம்மொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. மேலும், 2022 ஆம் ஆண்டு முதல் 4 நபர்களுக்கு தகவல் அமைப்பைத் தயாரிப்பதற்காக தலா ரூபா 280,000 வீதம் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. 2026 ஏப்ரல் 30 ஆம் திகதியாகும் போது ரூபா 21 மில்லியன் தொகையானது செலுத்தப்பட்டிருந்த போதிலும், இத்தகவல் முறைமை மூலம் எத்தகைய சேவையையும் மாகாண சபையால் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | தகவல் முறைமையானது உடனடியாகப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.10.6 முகாமைத்துவத் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உதவிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) கடமையாற்றிய அலுவலருக்குப் பட்டப்பின்படிப்பிற்காக ஜப்பான் செல்வதற்கு 2017 ஜூலை 10 ஆம் திகதி முதல் 02 வருட காலப்பகுதியொன்றுக்கும், அதனைத் தொடர்ந்து கலாநிதிப் பட்டமொன்றிற்காக 3 வருட காலப்பகுதியொன்றுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், முதலாவது ஒப்பந்த பத்திரத்திற்கமைய 9 வருட கால கட்டாய சேவைக் காலத்தை ஆற்ற வேண்டுமென இணங்கப்பட்டிருந்த போதிலும் 2 வருடங்களும் ஒரு மாதமும் மாத்திரம் சேவை செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது ஒப்பந்த பத்திரத்திற்கமைய கட்டாய சேவைக் காலம் 10 வருடங்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 அக்டோபர் 07 ஆம் திகதியன்று சேவையில் இணைந்து மீண்டும் 2024 அக்டோபர் 18 ஆம் திகதியன்று அனுமதியின்றி வெளிநாடு சென்றிருந்தார். கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாமல் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதன் மூலம் ஒப்பந்தத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஒப்பந்த பத்திரத்தின் பெறுமதியான ரூபா 4 மில்லியனை அவ் அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறு இல்லாவிடின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிப்பதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்த பத்திரத்திற்கு இணங்கச் செயற்பட்டுத் தொடர்புடைய தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.10.7 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கப் பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 3 (IV) ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் பிற செலுத்துகை தொடர்பாக நிதியமைச்சரின் ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை நியதிகளுக்கு இணங்கச் செயற்பட | கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளதாக. | சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்கக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். மேலும், 2019 மார்ச் 29 திகதிய மற்றும் PS/PCMD/SD/01/08 இலக்கத்தைக் கொண்ட ஜனாதிபதிச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாணப் பொதுச்சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்குச் சம்பளத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளைத் தீர்மானித்தலில் தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனினும், அதற்கு முரணாகப் பிரதம செயலாளர் அலுவலகத்தின் பல்வேறு 10 குழுக்களுக்காக ரூபா 19 மில்லியன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | | |

### 1.5.10.8 மனித வள முகாமைத்துவம்

| | | | |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டப் பதவிகளில் முறையே 186, 81 மற்றும் 855 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இவ் ஊழியர்கள் தொடர்பான அறிக்கைகள் சரியானது எனவும் ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது தேவைக்கேற்ப திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரமாணங்களின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டப் பதவிகளில் முறையே 25, 35 மற்றும் 171 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், முதலாம் நிலை மட்டப் பதவிகளில் 232 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர்கள் தொடர்பான அறிக்கைகள் சரியானது எனவும் ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது தேவைக்கேற்ப திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.11 தலைப்பு இலக்கம் 110 – பொறியியல் பணியகம்

### 1.5.11.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை போக்குவரத்துச் சபையின் சபரகமுவ பிராந்திய அலுவலகத்திற்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்த, அவிசாவெல்லை - இரத்தினபுரி வீதியில் அமைந்துள்ள 99/04/டீ இலக்கத்தைக் கொண்ட பொறியியல் பணியகத்தின் கட்டடத்தை மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அல்லது அக் கட்டட வளாகம் சபரகமுவ பேருந்து நிறுவனத்திற்குத் தொடர்ந்து அவசியமாயின், 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 70,000 மாதாந்த வாடகை அடிப்படையில் ஒப்பந்தம் | இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக. | மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு அமைவாக மீண்டும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு அல்லது கையகப்படுத்துவதற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்துகொள்ளுமாறு அல்லது மீளக் கையகப்படுத்துமாறு பிரதம செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய செயற்படப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ரூபா 20,000 மாதாந்த வாடகை மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. | | |
| (ஆ) | பொறியியல் பணியகத்தினால் கோப்பு முகாமைத்துவம் மற்றும் செயல்முறைகள் தானியக்க மென்பொருள் முறைமையை நிறுவுதல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபைக்கு 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 14 மில்லியன் ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டிருந்தன. மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் போட்டி ஏலக்கோரிக்கைகளின் கீழ் நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டு, பெறுமதி சேர் வரி இன்றி ரூபா 18 மில்லியன் தொகைக்கு 2018 திசெம்பர் 28 ஆம் திகதியன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஒப்பந்தத்தின் பிரகாரம் இக்கணினி மென்பொருள் முறைமையானது 2019 ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் எனினும், இற்றைவரை வேலைகள் முடிக்கப்பட்டு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதுவரை காலமும் இது பொறியியல் பணியகத்தின் பயன்பாட்டிற்கு உகந்ததாகப் பயனுள்ள வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதாக. | மென்பொருள் முறைமையினைத் விரைவாகத் தயாரித்து அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.12 தலைப்பு இலக்கம் 111 – வருமானத் திணைக்களம்

#### 1.5.12.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சட்டத்தரணிகளால் ஒப்பமிட்டுச் சான்றிதழளிக்கப்பட்ட பத்திரம் இரண்டாம் பிரதிகளுக்காக உரிய முறையில் முத்திரைத் கட்டணம் செலுத்துவது தாமதப்படுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்படாத முத்திரைக்கட்டணம் குறித்த தகவல்களைக் காணிப்பதிவு அலுவலகம் அனுப்பியிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் ஒப்பமிட்டுச் சான்றிதழளிக்கப்பட்ட ரூபா 3,339 மில்லியன் பெறுமதியான 816 பத்திரங்களில் 448 பத்திரங்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,468 | 2024 ஆம் ஆண்டில் 410 பத்திரங்களும் 2025 ஆம் ஆண்டில் 465 பத்திரங்களும் மாத்திரம் எஞ்சியுள்ளன எனவும் அது தொடர்பாக அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக. | முத்திரைக்கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்களைத் விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான 675 பத்திரங்களில் 506 பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை நிறைவு செய்து,வழங்கு முத்திரைக்கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்களை அறவிட்டுக்கொள்வதற்கு 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் மாகாண வருமான திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மேல் மாகாண வருமான திணைக்களத்தினால் காணி உரிமைகள் மாற்றீடு செய்வதற்காக முத்திரைக்கட்டணம் அறவிடும் போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைமைகளில் உள்ள பலவீனங்கள் காரணமாக, 2017 நவம்பர் 30 ஆம் திகதிய 738 இலக்கக் காணி மாற்றீட்டுப் பத்திரத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 4 மில்லியன் தொகையை நோத்தாரிசு மூலமாகத் தனியாருக்குப் பயன்படுத்தியிருந்தார். இத்தொகையும் அது தொடர்பான தண்டப்பணமும் சேர்த்து ரூபா 8 மில்லியனை அறவிட்டுக்கொள்வதற்காகக் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் 47142/5 இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அக் காலப்பகுதியில் தொடர்புடைய நோத்தாரிசு மரணமடைந்திருந்தமை காரணமாக இத்தொகையை இதுவரைக்கும் அறவிட்டுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | ஞாபகார்த்தத் தொகையை அறவிட்டுக்கொள்வது நீதிமன்று செயற்பாடு ஊடாக இடம்பெற்று வருவதாக. | முத்திரைக்கட்டணங்களை அறவிடுவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மாகாண வருமான திணைக்களத்திற்குச் சொந்தமான 07 வருமான தலைப்புகளுக்கு உரித்தான மொத்தம் ரூபா 66.5 மில்லியன் வருமானம் முறையான அனுமதியின்றி பதிவழிக்கப்பட்டுள்ளது. | பிழைகளைத் திருத்துவதற்காக பதிவழிப்புக்கன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | தொடர்புடைய சீராக்கத் திருத்திப் பிழைகள் குறைந்தளவில் அமையும் வகையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வருமானத் தலைப்புகள் 08 இன் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 555 மில்லியன் வருமானத் தொகையானது அறவிடப்படாமல் எஞ்சியிருந்தது. | எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எஞ்சிய வருமானங்களை அறவிடுதல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.13 தலைப்பு இலக்கம் 112 – உள்ளூராட்சி திணைக்களம்

#### 1.5.13.1 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (317) ஆம் பிரிவு மற்றும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 198 ஆம் பிரிவும் | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2023 ஆம் ஆண்டில் 5 மாநகரசபைகளுக்கும் 7 நகரசபைகளுக்கும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் 5 மாநகரசபைகளுக்கும் 5 நகரசபைகளுடனும் தொடர்புடைய அறிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | மகநகர சபைகள் 05 க்கு உரிய அறிக்கைகள் 2026 ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னரும் கொழும்பு மாவட்டத்திற்குரிய அறிக்கைகள் 2026 ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னரும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பெலியகொடை நகரசபை மற்றும் மினுவாங்கொடை நகரசபை என்பவற்றின் 198 அறிக்கைகள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய ஒரே அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | உள்ளூராட்சி ஆணையாளரின் கடமைப்பாட்டிற்கமைய மாநகரசபை கட்டளைச் சட்டம் மற்றும் நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கணிப்பீட்டு அறிக்கைகளைக் காலத்திற்குக் காலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணக் கோவையின் 54.6 | உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான 31 ஆரம்ப விசாரணைகளுக்குரிய விசாரணை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு 03 வருடங்களைக் கடந்த காலதாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் விசாரண நடவடிக்கைகளை நிறைவு செய்து அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் அவர்களுக்குரிய வேலைப்பழு காரணமாக ஆரம்ப விசாரணைகளை நிறைவேற்றி அறிக்கையை வழங்குவதற்கு உரிய கால எல்லையை விட தாமதமடைவதுடன், ஆரம்ப விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக விசாரணை அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக. | ஆரம்ப விசாரணைகளைத் விரைவாக நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.13.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி மன்றங்களின் சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டப் பதவிகளில் முறையே 204, 138 மற்றும் 2,168 வெற்றிடங்களும் முதலாம் நிலை மட்டப் பதவிகளில் 3,993 வெற்றிடங்களும் காணப்பட்டன. | ஊழியர்கள் தொடர்பான அறிக்கைகள் சரியானது எனவும் ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது தேவைக்கேற்ப திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 113 – சுகாதார சேவைகள் திணைக்களம்

### 1.5.14.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டினுள் வழங்கப்படும் இடைக்கால முற்பணம் ஆண்டின் இறுதியில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும், சுகாதார திணைக்களத்தின் ரூபா 14 மில்லியனும் கம்பஹா, ஹொரணை மற்றும் வத்துபிட்டிவலை ஆதார வைத்தியசாலைகளுக்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 17 மில்லியன் இடைக்கால முற்பணமும் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளச் செலுத்தப்படாத முற்பணம் வருடாந்தம் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதுடன் தற்போதுள்ள எஞ்சிய மீதி மேலதிகமாக வளர்ச்சி அடைவது இடம்பெறாது எனவும் சுகாதார திணைக்களத்தின் மீளச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 14 மில்லியன் என்பதாக. | இடைக்கால முன்பணத்தை உரிய நேரத்தில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படள வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 ஆம் திகதிய 02/2017 இலக்க நிதி மற்றும் ஊடக அமைச்சு சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனமும் அவ்வாகனம் உரித்தான நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனினும், கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள 42 வாகனங்கள் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சுகாதார திணைக்களத்தின் கீழ் வரும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான, 2016 ஆம் ஆண்டிலிருந்து தொடரும் பெறுமதி ரூபா 72 மில்லியனைக் கொண்ட காலாவதியான மருந்துகள் களஞ்சியசாலைகளில் காணப்பட்டமை காரணமாக, இடவசதியை முகாமைத்துவம் செய்துகொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டதுடன் இத்தொகைகளை அகற்றுவதற்காகச் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் திணைக்களம் மேற்கொண்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கிணங்க அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்கக் காலாவதியான மருந்துகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள பஸ்யால முதன்மை வைத்திய சிகிச்சை அலகு, மீரிகம ஆதார வைத்தியசாலை, சிங்ஹாரமுல்லை முதன்மை வைத்திய சிகிச்சை அலகு, வத்துபிட்டிவலை ஆதார வைத்தியசாலை மற்றும் கம்பஹா மாவட்ட வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமான 14.4730 ஹெக்டேயர் அளவான நிலங்களை அத்துமீறிய குடியேற்றவாசிகள் ஆக்கிரமித்திருந்தனர். | பதில் வழங்கப்படவில்லை. | அத்துமீறிய குடியேற்றவாசிகளை அகற்றி நிலங்களைச் ஒழுங்குபடுத்திக்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தின் ரூபா 45 மில்லியன் எஞ்சிய வருமானம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | நிலுவையாக உள்ள வருமானங்களை திறம்பட அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 79 மில்லியன் ஆன சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக, மாகாண நிதிப் பிரமாணம் 54 இன் பிரகாரம் அப் பெறுமதிகளை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ் இழப்புகளுக்கு இடையில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 06 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நட்டப் பரிசோதனைப் பரிந்துரைகளுக்கு இணங்க அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | பரிசோதனைகளின் பரிந்துரைகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அறவிடுதல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | திணைக்களத்தின் அலுவலர்களிடமிருந்து 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதியானது ரூபா 65.5 மில்லியனாகும். அக் மீதியினுள் 1-2 ஆண்டுகளுக்குஇடையில் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 08 மில்லியனும் 2-3 ஆண்டுகளுக்கு இடையில் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 05 மில்லியனும் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதியின் பெறுமதி ரூபா 27 மில்லியனுமாகும். | அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | அறவிடுதல்களைத் விரைவாகச் செய்யப்பட வேண்டும். |

### 1.5.14.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமெரிக்க மக்களின் நன்கொடையாக 2023 ஆம் ஆண்டில் மொறட்டுவை பிரதேச வைத்தியசாலைக்குக் கிடைத்த, 10 அறைகள் மற்றும் 02 கூட்ட அரங்குகளைக் கொண்டதும் அண்ணளவாக 40 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட இரு மாடிகளைக் கொண்ட கட்டடத்திற்காக 14 வளிச்சீராக்கிகள், 13 சுவர் மின்விசிறிகள், 05 மெலமைன் மேசைகள், படுக்கை அற்ற 25 கதிரைகள், 04 நிறைவேற்று அதிகாரக் கதிரைகள், 01 குளிர்சாதனப் பெட்டி, 02 மாற்றியமைக்கக்கூடிய கட்டில்கள் (Adjustable beds) போன்ற உபகரணங்களைக் கொண்டுள்ள கொள்கலன் கட்டடமானது வைத்தியசாலைக்குக் கிடைத்து இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் பயன்படுத்தப்படாமல் வீண்விரையமாக்கிக் காணப்பட்டது. | கட்டடத்தைப் பயன்பாட்டுக்கு எடுக்கவுள்ளதுடன் உபகரணங்களை வைத்தியசாலையின் வேறு இடங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நன்கொடைகளாகக் கிடைத்துள்ள சொத்துகளைப் பயனுள்ள வகையில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மினுவாங்கொடை மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தும் நோக்கைக் கருத்திற்கொண்டு, 2008 ஆம் ஆண்டில் மேல் மாகாண நிதியைப் பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைக் கூடத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய 2020 ஜனவரி 31 ஆம் திகதி முதல் அடிப்படை வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டிருந்தது. எனினும், சத்திரசிகிச்சைக் கூட வளாகம் திறந்து 11 | வைத்தியசாலைக்காக மயக்கமருத்து நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் சேவை கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் அவ்வப்போது நிபுணத்துவ சத்திரசிகிச்சை நிபுணர்களால் உள்ளக மயக்கமருந்து (Local Anaesthesia) வழங்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகள் | வரிசை அமைச்சுக்கு அறிவித்து மயக்கமருத்து நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும், சத்திரசிகிச்சைக் கூட வளாகத்தைத் திறந்து நோயாளர் பராமரிப்புச் சேவைக்காகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கு மேலாகக் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2026 ஏப்ரல் 17 ஆம் திகதியாகும வரையிலும், வைத்தியசாலைக்காக மயக்கமருத்து நிபுணத்துவர் ஒருவரின் சேவை கிடைக்கப் பெறாமையின் காரணமாகச் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படாமல் சத்திரசிகிச்சைக் கூடம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. இதனால் 112 க்கும் மேற்பட்ட சத்திரசிகிச்சைக் கூட உபகரணங்கள் மற்றும் 507 தொகையான திரவியங்கள் 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகப் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் முடங்கிக் கிடந்தன. | மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | வேண்டும். |

## 1.5.15 தலைப்பு இலக்கம் 114 – ஆயுள்வேத திணைக்களம்

### 1.5.15.1 பயன்படுத்தப்படாத / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 111.20 மில்லியனுக்கு நிர்மாணிக்கப்பட்ட மீகொட ஆயுர்வேத வைத்தியசாலையின் ஆயுர்வேத சிகிச்சை நிலையத்திற்கு 2025 செப்டெம்பர் 20 ஆம் திகதி முதல் மூன்று ஆயுர்வேத மருத்துவர்களும் முகாமைத்துவ சேவை அலுவலர் ஒருவரும் இணைக்கப்பட்டிருந்த போதிலும், அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சிகிச்சை நிலையத்திற்கும் வதிவிட அலகுகளுக்காகவும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் ரூபா 1 மில்லியன் பெறுமதியான வீட்டுப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களும் நுகர்வுப் பொருட்களும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் குறைவாக பயன்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. மேலும், நிலையத்தில் காணப்பட்ட எட்டு வளிச்சீராக்கி இயந்திரங்களின் உத்திரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது. | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வதிவிடக் கூடத்தின் வேலைகள் முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படவில்லை என்பதாக. | வேலைகளைத் விரைவாக நிறைவு செய்து நோயாளர் பராமரிப்புச் சேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லுகை என்பன உறுதிப்படுத்தப்படாமல், வருகைப் பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் உள்ள 33 நிறுவனங்களுக்குரிய சுகாதாரப் பணியாளர் குழாத்தைச் சேர்ந்த 405 அதிகாரிகளுக்கு மீளாய்வாண்டில் மொத்தச் சம்பளமாக ரூபா 462.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | வப./ஆயு./ஆ02/நி.பொது. இலக்க 2026.01.05 ஆம் திகதிய பொதுக் கடிதத்தின் மூலம் கைவிரல் அடைளாய இயந்திரத்தைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலைப் பணியாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் பொதுமக்கள் சிரமத்திற்கும் இன்னல்களுக்கும் உள்ளாவார்கள் என்பதால், இத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் சிரமம் காணப்படுவதாக. | சுற்றறிக்கைக்கு இணங்க வருகை மற்றும் வெளிச்செல்லுகை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்தித் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான 36 நிலங்கள் மற்றும் 20 கட்டடங்களைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்துவதற்காகத் தொடர்புடைய ஆவணங்கள் நில ஆணையாளருக்கும் அளவீட்டுப் பணிகளுக்காக அளப்பதிகாரி திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளதாக. | திணைக்களத்திற்கு நிலங்கள் மற்றும் கட்டடங்களைக் விரைவாகக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | லூனாவ மற்றும் மீகொட ஆயுர்வேத வைத்தியசாலைகளில் 2025 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மருந்துகள் போதுமான அளவுக்கு உற்பத்தி செய்யப்படாமையின் காரணமாக 26 வகையான மருந்துகள் வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வைத்தியசாலைகளுக்குள்ளேயே உற்பத்தி செய்வதற்கு வசதிகள் இருந்தும் வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாகத் திணைக்களத்திற்கு ரூபா 4 மில்லியன் நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது. | மருந்து இயந்திரங்கள் செயற்பாடின்மை, சீரற்ற காலநிலைகள் மற்றும் போதுமான ஊழியர் வசதிகள் இன்மையின் காரணமாக மருந்துகளை உற்பத்தி செய்ய முடியாமல் போனதாக. | வைத்தியசாலையினுள் உற்பத்தி செய்வதற்குத் தகுதி காணப்படுகின்ற மருந்துகளை உற்பத்தி செய்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆயுர்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான 2 ஏக்கர் 11 பேர்ச்சஸ் அளவான பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள யகிரல ஆயுர்வேதப் பொதுச் சுகாதார அலுவலக நிலத்தில் பல வருடங்களாக அத்துமீறிய குடியேற்றவாசிகள் வசித்து வந்த போதிலும், அத்தகைய அத்துமீறிய குடியேற்றவாசிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஏப்ரல் 25 ஆம் திகதியாகும் போதும் அத்துமீறிய குடியேற்றவாசிகள் வெளியேறவில்லை என்பதால் எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறிவிக்குமாறு சட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | அத்துமீறிய குடியேற்றவாசிகளை அகற்றி நிலத்தைப் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.16 தலைப்பு இலக்கம் 115 – சமூக சேவைகள் திணைக்களம்

#### 1.5.16.1 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள் - 560 ஆம் விதி | தற்காலிகமாகவோ அல்லது நிலையாகவோ மாகாண சபையின் வசமுள்ள அனைத்துச் சொத்துகளும் ஆவணப்படுத்தப்பட வேண்டும் எனினும், சமூக சேவைகள் திணைக்களத்தின் வசமுள்ள 24 மோட்டார் சைக்கிள்கள், வான் வாகனம் மற்றும் மீளாய்வாண்டில் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த மற்றும் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த சொத்துகள் தொடர்பாகப் பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் சைக்கிள்களை சீகாஸ் வேலைத்திட்டத்தில் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வான் வாகனம் மதிப்பிடப்படவுள்ளதாக. | மாகாண சபையின் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்கச் சொத்துகளை மீள்மதிப்பிட்டு ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.17 தலைப்பு இலக்கம் 116 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்

#### 1.5.17.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாகாண நிறுவனசார் மற்றும் தன்னார்வக் குழந்தை வளர்ப்பு நிலையங்களிலுள்ள 2,250 பிள்ளைகளுக்காக ரூபா 5.7 மில்லியன் (பெறுமதி சேர் வரி தவிர்ந்த) விலைக்கு ரி-சேர்ட்டுகளும் காற்சட்டைகளும் பெறுகை செய்யப்படும்பொது, பெறுகைச் செயன்முறைகளுக்கு அப்பால் பதிவு செய்யப்படாத ஆறு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு, ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காகப் பதிவு செய்யப்படாத, நிர்மாணப் பணிகளுக்காக ICTAD நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றிடமிருந்து ரி-சேர்ட்டுகளும் காற்சட்டைகளும் பெறுகை செய்யப்பட்டிருந்ததுடன், அரச பெறுகை வழிகாட்டற் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் இப்பெறுகைக்காக வழங்குநருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கோ அல்லது அதன் 5.4.10 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகையானது மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தமையினால் விலைமனு ஆவணங்களைத் தயாரிக்கும் போது தவறு நேர்ந்துள்ளதுடன், எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எதிர்காலத்தில் அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்கக் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.18 தலைப்பு இலக்கம் 118 – காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

#### 1.5.18.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தின் ரூபா 887 மில்லியன் நிலுவை வருமானம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்களை திறம்பட அறவிடுவதற்:கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.19 தலைப்பு இலக்கம் 120 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

#### 1.5.19.1 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள் - 54.6 ஆம் விதி | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தின் மருந்துக்களஞ்சியசாலையின் மின்சாரம் 2024 ஏப்ரல் 11 ஆம் திகதி துண்டிக்கப்பட்டமையினால் பெறுமதி ரூபா 1.8 மில்லியன் தொயைான தடுப்பூசிகளும் மருந்துகளும் சேதமடைந்திருந்தன. அதற்கமைய சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், 2026 ஏப்ரல் மாதமாகும் போது சேதம் ஏற்பட்டு 2 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாகப் பிரமாணத்திற்கமைய நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இப்போது வளிச்சீராக்கிக் கட்டமைப்பு செயற்பாட்டு நிலையில் காணப்படுவதுடன் முறைப்பாடுகள் எதுவும் இல்லை என்பதாக. | சேதமடைந்த மருந்துகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.19.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 06 மில்லியன் ஆன சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக, மாகாண நிதிப் பிரமாணம் 54 இன் பிரகாரம் அப் பெறுமதிகளை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ் நட்டங்களுக்கு இடையில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3.5 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நட்டப் பரிசோதனைப் பரிந்துரைகளுக்கு இணங்க அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | பரிசோதனைகளின் பரிந்துரைகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அறவிடுதல்களைத் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.20 தலைப்பு இலக்கம் 121 – மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

#### 1.5.20.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண மோட்டார் வாகன திணைக்களத்திற்குள் eRL-2 கட்டமைப்பினைச் செயற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் மே 12 ஆம் திகதி வரை ரூபா 37 மில்லியன் தொகையை மேல் மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தினால் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மேல் மாகாணத்திற்குள் eRL-2 திட்டம் செயற்பாட்டில் இருக்கவில்லை எனினும் இக் கட்டமைப்பு 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதி முதல் மேல் மாகாண சபை தவிர்த்த ஏனைய மாகாண சபைகளில் செயற்பாட்டில் இருந்தது. | கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பக் குறைபாடுகளைப் பூர்த்தி செய்த பின்னர் அதனைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக. | கட்டமைப்பின் குறைபாடுகளைத் திருத்தித் விரைவாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 207 மில்லியன் நிலுவை வருமானம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்களை அறவிடுதலைத் திறம்பட மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.21 தலைப்பு இலக்கம் 122 – கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

#### 1.5.21.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாவட்டத்தில் சணச சங்கங்கள் 04 உட்பட கூட்டுறவுச் சங்கங்கள் 11 இல் 2015-2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இடம்பெற்றுள்ள பெருமளவிலான பண மோசடி மற்றும் முறையற்ற கடன் வழங்கல்கள் காரணமாக ரூபா 4,473 மில்லியனுக்கும் அதிகமான நிதித் குறைபாடுகள், நிதியிழப்புகள் ஏற்பட்டதன் காரணமாக அச் சங்கங்கள் 11 உம் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தன. எனினும் 07 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் பிரமாணத்திற்கமைய விசேட கணக்காய்வுகள் அல்லது | விசாரணைகளை நடத்துவதற்காக விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | விரைவாக விசாரணைகளை நடத்தி நிதியிழப்புகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரமாணத்தின் 47(2) இன் பிரகாரம் விசாரணைகளை நடாத்தப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு மற்றும் நிதியிழப்புகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் கூட்டுறவு ஆணையாளர் தவறியுள்ளார். | | |
| (ஆ) | கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 28 இல் 2002 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கூட்டுறவுச் சங்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 623 மில்லியன் பண மோசடிகள் மற்றும் பண முறைகேடுகள் தொடர்பாக 03 க்கும் 23 க்கும் இடைப்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் கூட்டுறவு ஆணையாளரும் உதவி ஆணையாளர்களும் அது தொடர்பாகப் பிரமாணத்தின் 47 (2) ஆம் பந்தியின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி நிதியிழப்புகளை மீளப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | விசாரணைகளை நடத்துவதற்காக விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | விரைவாக விசாரணைகளை நடத்திச் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து நிதியிழப்புகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேல் மாகாண சபையின் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) பிரமாணத்தின் பிரகாரம், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது நிதியை அரச வங்கி ஒன்றில் முதலீடு செய்ய வேண்டும் என்பதுடன் வரையறுக்கப்பட்ட கொழும்பு மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சங்கம் மூலம் ரூபா 45 மில்லியன் பிரமாணத்திற்கு முரணாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு பிரமாணத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை மீண்டும் பெற்றுக்கொண்டு அரச வங்கிகளில் முதலீடு செய்வதற்கு கூட்டுறவு ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஒழுங்குபடுத்துகை மீதான கூட்டுறவு ஆணையாளரின் அதிகாரங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024/2025 ஆம் ஆண்டுகளில் இந் நிறுவனங்களிலிருந்து ஒரு பகுதி பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | பிரமாணத்திற்கமைய நிதி முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுறவுப் பிரமாணத்திற்கு முரணாகச் சீ/ச கிழக்கு ஹவாகம் கோரளையின் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கூட்டுறவு ஆணையாளரின் அனுமதியின்றி அரசாங்கப் பிணைமுறி குறித்த பிரதான விற்பனையாளர் அல்லாத தனியார் நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்தமையினால் | அந்நேரத்திலிருந்த பணிப்பாளர் சபை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விசாரணை உத்தியோகத்தர்களால் | பிரமாணத்திற்கமைய செயற்பட்டு நிதியிழப்புகளை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் இழப்புகளைக் குறைத்துக்கொள்ளக் கூடிய வகையில் |

| | | |
|---|---|---|
| சங்கத்திற்கு ரூபா 788 மில்லியன் நிதியியல் இழப்பு ஏற்பட்டு 09 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் கூட்டுறவுப் பிரமாணத்தின் பிரகாரம் அத்தகைய நிதியிழப்புகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் தீர்ப்பகத்திற்காகத் தீர்ப்பகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகைய தீர்ப்பகப் பணிகளை இடைநிறுத்துவதற்காக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும். | பிரமாணங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.22 தலைப்பு இலக்கம் 125 – தொழில் திணைக்களம்

#### 1.5.22.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவு ரூபா 13 மில்லியனுக்கு வடிவமைக்கப்பட்ட சேலை உற்பத்தி மற்றும் கட்டில் விரிப்பு உற்பத்தி செய்வதற்காக நெசவு இயந்திரம், பழுதுபார்க்கும் இயந்திரம், நெய்தல் இயந்திரம் மற்றும் சுழற்றும் இயந்திரம் உள்ளிட்ட 04 சக்தி இயங்கு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, அவ்வியந்திரங்களின் செயற்பாடு மற்றும் சேலை உற்பத்தி சம்பந்தமாகப் பயிற்சி பெறுவதற்காகத் தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட 04 அதிகாரிகள், வீதி மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரி ஒருவர் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயந்திரப் பொறியியலாளர் என 06 உத்தியோகத்தர்களுக்கு 07 நாள் இந்தியச் சுற்றுப் பயணம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. 2 வருடங்களுக்கு நெருங்கிய காலம் கடந்திருந்த போதிலும் நெசவு இயந்திரம் மூலம் சேலை உற்பத்தி எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சக்தி இயங்கு இயந்திரங்களை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் இயந்திரம் வழங்கப்பட்டு முதல் மாதத்திற்குள் இயந்திர வழங்குநரால் நூல் இடப்பட்டு உற்பத்திச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் 6 மாதங்கள் செல்லும் வரை அச் செயற்பாட்டுக்குப் பங்களிப்பும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும் எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நெசவு இயந்திரம் தற்பொழுது செயற்பாட்டு நிலையில் உள்ளதுடன் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட சேலை ஆடைகளுக்கான துணிகள் தயாரித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அத்தகைய உற்பத்திகள் மஹர களஞ்சியசாலைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக. | பதில்கள் சரியானவை அல்ல என்பதுடன் இயந்திரங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.23 தலைப்பு இலக்கம் 126 – கல்வித் திணைக்களம்

#### 1.5.23.1 செயலாற்றல்

| | | |
|---|---|---|
| (அ) மேல் மாகாணத்திற்குள் 11 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு உட்பட்ட மாகாணப் | சதவீதம் சரியானது என்பதுடன் அதனை மேலும் | மாணவர்களின் பெறுபேறுகளை |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலைகளில் 2024 (2025) ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்காக 81,242 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அதில் 20,733 தொகையினர் அதாவது சதவீத அடிப்படையில் 26 சதவீதம் பேர் க.பொ.த (உயர் தர) பரீட்சைக்காகத் தகுதிபெற்றிருக்கவில்லை. அவற்றுள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 1,041 ஆனதுடன் அது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1.28 சதவீதமாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 192 ஆல் அதிகரித்திருந்ததுடன், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பிரதான பாடங்களில் சித்தியின்மை 20 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட ஒரு பெறுமதியைக் கொண்டிருந்தது. | குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக. | உயர்த்திக் கொள்வதற்கான வினைத்திறனான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மேல் மாகாண 11 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் க.பொ.த (உயர் தர) பரீட்சைக்காக 53,274 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன், அதில் 16,288 மாணவர்கள் அதாவது 31 சதவீதம் பேர் பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்சத் தகுதியான பிரதான பாடங்கள் 03 இல் சித்தியடைவதற்கும் இயலாமல் போயிருந்தது. | சதவீதம் சரியானது என்பதுடன் அதனை மேலும் குறைந்த மட்டத்திற்குக்கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாக. | மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்திக் கொள்வதற்காகப் வினைத்திறனான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.23.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிறுவனங்களால் பாதீட்டை நடைமுறைப்படுத்துவது மற்றும் அறிக்கையிடுவது தொடர்பாக மேல் மாகாண பிரதான செயலாளரின் 2021 நவம்பர் 02 திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 10/2021 இன் அறிவுறுத்தல்களுக்கு அமைய, செலவின விடயம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள மாகாண சபையின் அனைத்துத் திணைக்களங்களினாலும் தமது நிறுவனத்தின் சார்பில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடுகளைச் செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களீன் படி ரூபா 101 மில்லியன் ஆன நலன்புரிச் | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட செலவின விடயங்களுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுவதுடன், அதற்கமையப் பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்தில் இச்செலவின விடயங்களை உள்ளடக்கிச் செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | எதிர்காலத்தில் சுற்றுநிருபத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைச் செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவின விடயம் மற்றும் மூலதனச் செலவின விடயம் தொடர்பான முன்மொழியப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிச் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.23.3 எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 23 திகதிய கல்விச் செயலாளரின் இலக்கம் 20/2021 இன் புத்தாக்க ஆய்வுகூடங்களுக்கான பாடசாலை மட்டத்திலான மானியங்களை வழங்கும் சுற்றறிக்கையின் பிரகாரம் மேல் மாகாணத்திற்குரிய 100 பாடசாலைகளுக்காக ரூபா 80 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்காக 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 61 மில்லியன் மற்றும் ரூபா 19 மில்லியன் நிதியுதவிகள் மாகாணப் பாடசாலைகள் 76 மற்றும் 24 இற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. எனினும் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகையிலிருந்து ரூபா 09 மில்லியனும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகையிலிருந்து ரூபா 05 மில்லியனுமாக மொத்தமாக ரூபா 14 மில்லியன் தொகையானது 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போதும் உத்தேசிக்கப்பட்ட பணிக்காகப் பயன்படுத்தப்படாமல் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்குகளில் தக்கவைக்கப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கப்பட்ட நிதியில் 17 சதவீதமாகும். மேலும், பாடசாலைகள் 03 புத்தாக்க ஆய்வுகூடங்களை நிறுவுவதற்காக எந்தவிதச் செலவையும் மேற்கொண்டிருக்கவில்லை. | புத்தாக்க ஆய்வுகூடங்களை நிறுவ வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் உரிய காலப் பகுதிக்குள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டமையால் 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கடிதங்கள் மற்றும் வட்சப் குறுஞ்செய்திகள் ஊடாக அதன் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பயனாளர்கள் பாடசாலைகளை விழிப்புணர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | புத்தாக்க ஆய்வுகூடங்களை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைத் தாமதமின்றிச் சம்பந்தப்பட்ட பணிக்காகப் பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.23.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையில் இருந்து விலகிய மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியினை அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது நீண்டகாலமாகக் கடன் மீதியினை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் பின்னர் கடனை | ரூபா 10,020,273 கடன் மீதியொன்று அறவிடப்படுவதற்கு உள்ளதாக. | சுற்றறிக்கை மற்றும் நிருவாகக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைக் கடன் மீதிகளைச் இணக்கம் செய்துகொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட்டுக்கொள்ள முடியாதுவிடின் அதனைத் தள்ளுபடி செய்வதற்காக 2025 மார்ச் 25 ஆம் திகதிய மேல் மாகாண செயலாளரின் 06/2025 இலக்கம் கொண்ட நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் எனினும், 2026 ஏப்ரல் 24 ஆம் திகதியின் போது சேவையையில் இருந்து விலகிய உத்தியோகத்தர்கள் 109 பேரிடமிருந்தும் மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 13 பேரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 10,020,273 கடன் மீதியினை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கல்வி அமைச்சின் 2021 ஏப்ரல் 28 ஆம் திகதிய 6/2021 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 6.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாணப் பாடசாலைகளில் வலய மட்டத்தில் ஆசிரியர்களைச் சமப்படுத்தியதன் பின்னர் தொடர்ந்தும் காணப்படும் பற்றாக்குறைகள் / மிகைகளினை மாகாணப் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆசிரியர் சமப்படுத்தல் மாகாணப் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் அதற்கமையச் செயற்பட்டிருக்கவில்லை எனினும் மேல் மாகாணத்திற்குள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ஆசிரியர் சேவையின் மிகை 1,207 ஆகவும் பற்றாக்குறை 6,268 ஆகவும் இருந்தன. ஒவ்வொரு பிரிவு மற்றும் வலயத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும்போது இரண்டாம் நிலைப் பிரிவில் ஆசிரியர் மிகை 482 உம் உயர்தரப் பிரிவில் ஆசிரியர் மிகை 329 உம் ஆரம்பப் பிரிவில் ஆசிரியர் மிகை 04 உம் மற்றும் 13 வருட உத்திரவாத தொடர்ச்சியான கல்வித் திட்டத்திற்குரிய வகையில் ஆசிரியர் மிகை 48 உம் ஏனைய பாடங்களில் ஆசிரியர் மிகை் 344 உம் காணப்பட்டன. | ஆசிரியர்களுக்கான இடமாற்றச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனினும், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் நியமனப் பாடம் மற்றும் இடமாற்றத்தினைக் கோரியுள்ள பாடசாலைக்குப் பொருத்தமான ஆசிரியர் ஒருவருக்கே இடமாற்றங்களை வழங்குவதற்கு இயலாதுள்ளதாக. | சுற்றறிக்கைக்கு அமைய ஆசிரியர்களைச் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படஎ வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 29 திகதிய கல்வி அமைச்சின் செயலாளரின் 54/2023 ஆம் இலக்கம் சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் கையேட்டின் 7.4 ஆம் பிரிவின் பிரகாரம் பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும்போது அங்கீகரிக்கப்பட்ட நிதிகள் மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் தவிர்ந்த பெற்றோரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது எனினும் மேல் வ.ப/க/ஹொரணை வலயத்திற்குரிய பாடசாலை ஒன்றினால் 2024 மார்ச் 13 திகதிய நிறைவேற்றுக் குழுத் தீர்மானத்திற்கமைய புதிய மாணவன் ஒருவரைப் பாடசாலைக்கு உள்ளீர்க்கும்போது ரூபா 3,000 தொகையானது அறவிடப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டில் | அங்கீகரிக்கப்பட்ட நிதிகள் மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் தவிர்ந்த பெற்றோரிடமிருந்து பணத்தைச் சேகரிப்பதை மேற்கொள்ள வேண்டாம் என அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கைக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட நிதிகள் மற்றும் அங்கத்துவக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் என்பதுடன் பாடசாலை அபிவிருத்தி நிதிகளை முறையாகப் பயன்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01, 06 மற்றும் 12 ஆம் தரங்களுக்காக உள்ளீர்க்கப்பட்டிருந்த மாணவர்கள் 229 பேரிடமிருந்து உள்ளீர்ப்புக்கான கட்டணமாக மொத்தமாக ரூபா 687,000 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2025 ஆம் ஆண்டில் வலய அலுவலகங்கள் 02 க்குரிய பாடசாலைகள் 02 இலிருந்து அன்பளிப்புகள் எனக் குறிப்பிடுவதன் மூலம் பல்வேறு பணிகளுக்காக ரூபா 3 மில்லியன் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்காமலும் முறையான அங்கீகாரம் இன்றியும் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | ரூபா 23 மில்லியனான சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக, மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள் 54 இன் பிரகாரம் அப் பெறுமதியை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டப் பரிசோதனைப் பரிந்துரைகளின் பிரகாரம் அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | பரிசோதனைகளின் பரிந்துரைகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் அறவீடுகள் விவைாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | திணைக்களத்தின் உத்தியோகத்தர்ளிடமிருந்து 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்படுவதற்கிருந்த கடன் மீதியானது ரூபா 80.5 மில்லியனாகும். அவ் மீதியினுள் 1-2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அறவிடப்படுவதற்கிருந்த கடன் மீதி ரூபா 09 மில்லியனும் 2-3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அறவிடப்படுவதற்கிருந்த கடன் மீதி ரூபா 04 மில்லியனும் 4 வருடங்களுக்கும் மேற்பட்ட காலகட்டத்தில் அறவிடப்படுவதற்கிருந்த கடன் மீதியின் பெறுமதி ரூபா 24 மில்லியனுமாகும். | அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | அறவீடுகளைத் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |